துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் நியமனம்.

*424 வினு : **திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தனியாரால் நடத்தப்படும் துவக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரத்தை அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகளிடம் அளிப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, சில தனியார் நடத்தும் பள்ளிகளில் நிர்வாகிகள் ஆரம்ப ஆசிரியர்களை நியமிக்கும் போது 'புரோ நோட்டுகள்' எழுதி வாங்கிக் கொண்டு நியமிக்கிருர்கள். சம்பளம் வாங்கியவுடன் சம்பளத்தில் ஒரு பகுதி நிர்வாகிகளுக்குப் போய், மீதிதான் அந்த ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. ஆகவே, நிர்வாகிகளின் மூலம் சம்பளம் கொடுக்காமல், நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : அதுபற்றிக் குறிப்பிட்டு தகவல் அனுப்பினுல் நாம் தவறுகளைக் கண்டுபிடிக்கலாம்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த தனியார் பள்ளிகளிலே வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் சர்க்கார் பள்ளிகளிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படி போன்றவைகளிலே பெரிய தாரதம்மியம் இருக்கிறது. இவை இரண்டையும் ஒன்றுக அமுல்படுத்த சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

தொடக்கநிலை ஆசிரியர்கள்

*425 வினு : **திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** **திரு. கரு. சீமைச்சாமி :** } மாண்பு மிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கல்வியினுடைய தர உயர்வு கருதி அனைத்து ஹயர்கிரேடு ஆசிரியர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி ஆங்கிலத்திற்கு மட்டிலும் அமைத்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்று 27-12-1964, 1-8-1966, 8-3-1967 ஆகிய தேதிகளில் சர்க்காருக்கு அனுப்பப் பட்டுள்ள ஆசிரியர் கூட்டணி வேண்டுகோள் சர்க்காரின் பரிசீலனை யிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்த ஹையர் கிரேட் பயிற்சியை அறவே எடுத்து விடுகின்ற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஹையர் கிரேட் ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் 10,000-க்கு மேல் இருந்தார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டு தோறும் திட்டமிட்டு அதன் மூலம் அவர்கள் இந்த செக்கண்டரி கிரேட் இடத்தை பிடித்து விடுவார்கள். இன்னும் ஆண்டுகள் செல்லச்செல்ல ஹையர் கிரேட் ஆசிரியர்கள் தேவை குறையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.